(Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

OS 1776/2023

Deposition of witness

| | | |
|---|---|---|
| Name | : B.Rajeswari | PW1 |
| Husband Name | : Surendaran | |
| Age/Sex | : 49 | |
| Adress | : No.15, Ramanujam Street, T.Nagar, Chennai 600 017 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of November 2024

---

**13.11.2024**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் தந்தையின் பைனான்ஸ் சம்பமந்தமாக நான் இந்த வழக்கில் எதுவும் குறிப்பிடவில்லை. என் தாய் மற்றும் என் சகோதர சகோதரிகளுக்கு இந்த விவரம் தெரிந்ததால் நான் அதை குறிப்பிடவில்லை. அவர் குறிப்பிட்டு எந்த ஆண்டு பைனான்ஸ் வியாபாரம் ஆரம்பித்தார் என்று எனக்கு தெரியாது. என் தந்தை எந்த வித பைனான்ஸ் வியாபாரமும் செய்யவில்லை என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு நிர்மலா ஸ்டோர்ஸ் என்ற ஓரே வியாபாரம் இருந்தது என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் சகோதர சகோதரிகளுக்கு எல்லா விவரமும் தெரிந்ததால் தான் நான் தாக்கல் செய்யவில்லை. என் தாத்தா என் அப்பா சித்தப்பா எல்லோரும் கூட்டுக்குடும்பமாக தான் நிர்மலா ஸ்டோர்ஸ் நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். என் தந்தை எந்த உயிலும் எழுதிவைக்கவில்லை.இந்த வழக்கில் நான் இதர சொத்துக்களை சேர்க்காமல் தாக்கல் செய்தது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.நிர்மலா ஸ்டோர்ஸ் மூலமாக வந்த வருமானத்தை வைத்து புரசைவாக்கத்தில் 3 வீடும் வேப்பேரியில் 1 வீடும் மற்றும் தாராபுரத்தில் 22 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நிர்மலா ஸ்டோர்ஸ் மூலம் வாங்கப்பட்ட சொத்து தாராபுரத்தில் மட்டும் தான் உள்ளது .அது எங்கள் பூர்வீக சொத்து ஆகும்.தாராபுரத்தில் OS.NO. 424/2022 நிலுவையில் உள்ளது. அந்த

வழக்கில் நான் பிரிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளேன் அதனால் நான் பதிலுரை தாக்கல் செய்யவில்லை. வா சா 1 ஆவணத்தில் தாவா சொத்தை என் தந்தை  தன்னுடைய சுய சம்பாத்தியத்தில் தான் கிரையம் வாங்கியுள்ளார் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய படிப்பு செலவு மற்றும் இதர செலவுகள் அனைத்துமே எனக்கு நிர்மலா ஸ்டோர்ஸ் மூலம் வரும் வருமானத்தை வைத்து தான் எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இருந்த கடன்களை 2ம் பிரதிவாதி தான் இன்றைய தேதி வரை அடைத்து வருகிறார் என்றால் சரியல்ல.2012ல் என் தந்தை இறந்த பின்பு நான் வாய் மொழியாக தான் பாகம் கேட்டு வந்தேன்.நிர்மலா ஸ்டார்சில் வரும் கணக்கு வழக்கை 2ம் பிரதிவாதி கேட்பதால் தான் அதை தடுக்கும் நோக்கத்தோடு என்னுடைய பெரியப்பா மகன் தாராபுரத்திலும் மற்றும் என்னை துாண்டிவிட்டு  இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாராபுரத்தில் உள்ள சொத்தில் மற்றும் தாவா  சொத்தில் மட்டும்  தான் உரிமை கோருவது நான் என்னுடைய பெரியப்பா மகனிடம் இதர சொத்துக்கள் சம்மந்தமாக ஒரு ரகசிய ஒப்பந்தம் போட்டுக்கொண்டதால் தான் அந்த இதர சொத்துக்களில் நான் எந்தவித உரிமையும் கோரவில்லை என்றால் சரியல்ல. என் தந்தையின் வங்கி சம்மந்தமாக விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. எனக்கு சொத்தில் உரிமை இருந்தும் என் சகோதரருக்கு அந்த சொத்து சேரக்கூடாது என்ற காரணத்தினால் தான்  இதர சொத்துக்களில் பங்கு கேட்கவில்லை என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் நிர்மாலா ஸ்டார்சில் வரும் வருமானத்தை வைத்து வாங்கப்பட்ட அனைத்து சொத்துக்களிலும் எல்லோருக்கும் உரிமை உள்ளது என்று  ஒரு குடும்ப ஏற்பாடு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் என்னுடைய தாத்தா பெரியப்பா அப்பா ஆகியோர் இறந்த பின்பு அந்த குடும்ப ஏற்பாட்டை மீறி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Dt.13.11.2024 II Addl. District Judge.